PGIE
POST GRADUATE INSTITUTE OF ENGLISH

# ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம் (இலங்கை திறந்த பல்கலைக்கழகம்)

# பணிப்பாளர் பதவி

இலங்கை திறந்த பல்கலைக்கழக, ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளர் பதவிக்காக இலங்கை பிரசைகளிடம் இருந்து 2024.09.24 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப இறுதித் திகதிக்கு 63 வயதுக்கு குறைவாக இருத்தல் வேண்டும்.

எதிர்பார்ப்புடைய விண்ணப்பதாரர் பட்டப்பின்படிப்பு தகைமைகள் (ஆங்கிலம்/ ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பிலான துறையில் கலாநிதிப் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் விரும்பத்தக்கது) மற்றும் நிர்வாக அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும். வெற்றிகரமான அபேட்சகர் பல்கலைக்கழகம் மற்றும் ஏனைய தேசிய மற்றும் சர்வதேச கல்விசார் நிறுவனங்களில் உள்ள ஏனைய அமைப்புகளுடன் பணி உறவுகளை நிறுவுவதற்கு மற்றும் கல்விசார் தலைமைத்துவத்தை வழங்க பொறுப்பு வகிப்பார். அவர் சிறந்த ஆளிடை திறன்களை பெற்றவராகவும் நிறுவனத்தின் சமூகத்திற்கான பொறுப்புகள் பற்றி புரிந்தவராகவும் இருத்தல் வேண்டும். தொலைக் கல்வி முறையில் கற்பித்தல்/ கற்றலில் உள்ள அனுபவம் அனுகூலமாக அமையும்.

2005இன் 04 ஆம் இலக்க ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவக கட்டளை விதிகளின்படி, பணிப்பாளரானவர் நிறுவனத்தின் முழு நேர அதிகாரியாகவும், முதன்மை நிறைவேற்று அதிகாரியாகவும், முதன்மை கல்விசார் அதிகாரியாகவும், கணக்கு பொறுப்பு அதிகாரியாகவும் இருப்பார். பணிப்பாளரானவர் நிறுவனத்தின் முகாமைத்துவ சபையின் தலைவர் மற்றும் கல்விசார் குழுக்களின் பதவிவழி உறுப்பினராவார். நியமிக்கப்படும் பணிப்பாளர், நியமனத் திகதியில் இருந்து மூன்று ஆண்டுகளுக்காக அல்லது 65 ஆவது வயது பூர்த்தி செய்வது ஆகிய நிகழ்வுகளில் முதலில் ஏற்படும் நிகழ்வு வரை பதவி வகிப்பார்.

ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம் நிறுவப்பட்டது குறிப்பாக ஆங்கில மொழி கற்பித்தல் (ELT) மற்றும் ஆங்கில ஆசிரியர் கல்வியை வளர்ப்பது மற்றும் மேம்படுத்துவதற்காகும். கடந்த ஆண்டுகளில் நிறுவகத்தின் வளர்ச்சி கணிசமான முன்னேற்றம் கண்டிருப்பதோடு இன்று இந்த நிறுவனம் பலவிதமான ஆங்கில கற்றல்கள் தொடர்பான துறைகளில் கற்கைகளை வழங்குகிறது.

சிறந்த கல்விப் பின்னணி, சிறப்பான ஆய்வு மற்றும் முகாமைத்துவ பதிவு மற்றும் சவால்களை சந்திக்கும் பார்வையுடனான ஒருவரை முகாமைத்துவ சபை தேடுகிறது.

U - AC 5 – (ரூபா.117,350-13X2700-152,450/) சம்பள அளவு மற்றும் பதவிக்கு பொருந்துகின்ற கொடுப்பனவுகளை பெற பணிப்பாளர் தகுதி பெறுவார். தற்போது அரச சேவையில் உள்ளவர்கள் மற்றும் மேற்கூறிய சம்பள அளவின் ஆரம்பத்தை விட அதிகமாக சம்பளம் பெறுபவர்கள் சமமான சம்பள புள்ளியில் வைக்கப்படுவார்கள். 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தில் வரையறுக்கப்பட்டவாறு விண்ணப்பதாரர் ஒரு ஆசிரியராயின், அடிப்படை சம்பளத்தின் 203% கல்விசார் கொடுப்பனவு ஒன்று அவருக்கு வழங்கப்படும்.

**பணிப்பாளருக்கு வழங்கப்படும் ஏனைய நன்மைகள்:**

* அரசு அங்கீகரித்த போக்குவரத்து கொடுப்பனவுகள்
* அடிப்படை சம்பளத்தின் 12% உபசரிப்பு படி
* பல்கலைக்கழக சேமலாப நிதிய (UPF) பங்களிப்பு.
* ஊழியர் நம்பிக்கை நிதிய (ETF) பங்களிப்பு.

**விண்ணப்பத்துடன் பின்வரும் ஆவணங்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.**

- விண்ணப்பதாரரின் பிறந்த திகதி உட்பட முழுமையான சுயவிபரக் கோவையின் பிரதி ஒன்று
- பணிப்பாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டால் நிறுவகத்தை அபிவிருத்தி செய்வது பற்றிய பார்வை மற்றும் விண்ணப்பதாரரின் அடைவு நோக்கு பற்றிய சுருக்கமான அறிக்கை.
- பதவிக்கு நியமிக்கப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என்பதை குறிப்பிடும் தொழில் வழங்குநரிடம் இருந்து கடிதம் (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள், அரச சேவை, கூட்டுத்தாபனம் மற்றும் சட்டரீதியான சபைகளின் விண்ணப்பதாரர்களுக்கு இது பொருந்தும்.)

குறுகிய பட்டியலுக்கு தேர்வு செய்யப்பட்டால், விண்ணப்பதாரர் நிறுவகம் தொடர்பில் தமது பார்வை பற்றி அவர் முகாமைத்துவ சபைக்கு முறையாக அறிவிப்பதற்கு கோரப்படுவர். பணிப்பாளர் பதவிக்கான தேர்வு நடைமுறை நியமன நடைமுறைக்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட 2024.01.01 ஆம் திகதிய 01/2024 ப.மா.ஆ. சுற்றுநிருபத்தில் நிர்ணயிக்கப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை 2024.09.24 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் டபிள்யு.டி.டீ. திலகரத்ன, சிரேஷ்ட உதவிப் பதிவாளர், ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், த.பெட்டி 21, நாவல, நுகேகொட என்ற முகவரிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறை ஒன்றில் கைகளால் சேர்த்தல் அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பணிப்பாளர் பதவி/ PGIE” என்று பதவியின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும்.

முழுமை பெறாத அல்லது தேவைகளுக்கு இணங்காத அல்லது இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தவிர, PDF வடிவில் மேலுள்ள ஆவணங்களுடன் வேறு ஏதேனும் ஆதார ஆவணங்களையும் சேர்த்து மென் பிரதி ஒன்றாக sarpgie@ou.ac.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு 2024 ஜனவரி 1 ஆம் திகதிய 01/2024 ஆம் இலக்க ப.மா.ஆ. ஆணைக்குழு சுற்றுநிருபத்தை பார்க்கவும்.

**டபிள்யு.டி.டீ. திலகரத்ன**
**சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ முகாமைத்துவ சபை செயலாளர்**
**ஆங்கில பட்டப்பின்படிப்பு நிறுவகம்,**
**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,**
**த.பெட்டி 21, நாவல, நுகேகொட - தொலைபேசி 011-2825805**
**2024 ஓகஸ்ட் 25**